**செய்தி வெளியீடு எண் : 1664** **நாள் : 23.09.2022**

**செய்தி வெளியீடு**

விளிம்பு நிலை மக்களுக்கான பொருளாதார முன்னேற்றமே அவர்களுக்கான சமூக நீதியாக அமையும் என்பதில் உறுதியான நம்பிக்கை உடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுரைக்கிணங்க, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி. என். கயல்விழி செல்வராஜ் அவர்களால் 2022 – 2023ஆம் ஆண்டிற்கான சட்டமன்ற பேரவை வரவு செலவு கூட்டத்தொடரில் கீழ்க்காணும் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

**"தூய்மைப் பணியாளர்களை உறுப்பினர்களாக கொண்டுள்ள 13 மகாத்மா காந்தி தொழிலாளர்கள் ஒப்பந்தம் மற்றும் திறன் மேம்பாட்டுக் கூட்டுறவு சங்கங்கள் மூலம் சுகாதார அங்காடிகள் (Sanitary Marts) தலா ரூ. 15.00 இலட்சம் வீதம், ரூ.1.96 கோடி மதிப்பீட்டில் அமைக்க ரூ.98.00 இலட்சம் மானியம் வழங்கப்படும்."**

மேற்காணும் அறிவிப்பினை நடைமுறைப்படுத்தும் பொருட்டு தூய்மைப் பணியாளர்களை உறுப்பினர்களாக கொண்டுள்ள 13 மகாத்மா காந்தி தொழிலாளர்கள் ஒப்பந்தம் மற்றும் திறன் மேம்பாட்டுக் கூட்டுறவு சங்கங்கள் மூலம் **சுகாதார அங்காடிகள் (Sanitary Marts**) ரூ. 1.96 கோடி மதிப்பீட்டில் அமைக்க ரூ. 97,50,000/– (ரூபாய் தொண்ணூற்று ஏழு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) அரசு மானியமாக விடுவித்து அரசாணை (நிலை) எண். 83. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந6)துறை, நாள்.19.09.2022–இல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**அரசு கூடுதல் செயலாளர்,**
**ஆதி திராவிடர் (ம) பழங்குடியினர் நலத் துறை**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in